★ ★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 78
National Tamil Daily தேசிய தினசரி
(30 4-65)
விசுவாவசு சித்திரை 18 துல்ஹஜ் பிறை 27 வெள்ளிக்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன்



சொனென்ஷீன்
பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவினியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# அடுத்த நடவடிக்கை: பாக். ஆராய்ந்தது

## எல்லை நெடுகிலும் படைபலம் அதிகரிக்கப்பட்டது

### பொதுப்படை திரட்ட பாகிஸ்தான் உத்தரவு

ராவல்பின்டி, ஏப். 29

இந்திய-பாகிஸ்தானின் உறவுகளை விருத்தி செய்வதா அல்லது துண்டிப்பதா என்பதை இறுதியாக நிர்ணயிக்கும் பொருட்டு இன்று பாகிஸ்தானின் மந்திரிசபை அவசரமாகக் கூடி ஆராய்ந்தது. இந்த விசேஷ மந்திரிசபைக் கூட்டத்துக்கு பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் தலைமை வகித்தார். இந்தியப் பிரதமர் சாஸ்திரி, மற்றும் பல்வேறு நாட்டுத் தலைவர்கள் விடுத்திருந்த கோரிக்கைகள் மந்திரிசபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இதற்கிடையில் பாகிஸ்தான் தனது படைபலத்தை அதிகரிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுப் படையொன்றைத் திரட்ட பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதுடன் கிழக்குப் பாகிஸ்தான், மேற்கு வங்காள எல்லை நெடுகிலும் ஏராளமான பாக். துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களாக நெருக்கடி தணிந்திருந்த பியர்பேட் பகுதியில் இன்று நிலைமை மோசமாகக்காணப்பட்டது இரண்டு நாள் ஓய்வையும் பாகிஸ்தான் 'மிகவும் தந்திரமான' முறையில் பயன்படுத்தியிருக்கிறதென்றும் பெரியதொரு தாக்குதலுக்கு பாகிஸ்தான் திட்டமிட்டு வருகிறதென்றும் இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

#### அமெரிக்கா அறிவிப்பு?

இந்திய-பாகிஸ்தான் எல்லைச் சண்டையில் பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை உபயோகிக்கக்கூடாதென்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது எல்லைச் சண்டையின் போது பாகிஸ்தான் உபயோகித்த அமெரிக்க டாங்கிகளின்

(6-ம் பக்கம் பார்க்க)

## மாநகரசபை ஊழியருக்கு யாழ். மேயர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

மாநகரசபையில் சேவைசெய்யும் ஊழியர்கள், சொந்த நலன்கருதி தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் வெளியாருக்கும் பணிபுரிவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் யாழ்ப்பாண மேயர் இரகசியச் சுற்றறிக்கையொன்றில் எச்சரித்துள்ளார்

மின்சாரநிலையம், மராமத்துப்பகுதி, நீர்வேலைப்பகுதி ஊழியர்களுக்கும் அப்பகுதிகளின் தலைவர்களுக்கும் மேயர் எஸ். வி, மகாதேவா விடுத்துள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

மாநகரசபையின் மராமத்துப்பகுதி நீர்வேலைப்பகுதி, மின்சாரநிலையம் ஆகியவைகளின் ஊழியர்கள் சிலர் தாம் சபைக்கு மட்டும் செய்ய வேண்டிய சேவைகளையும் கடமைகளையும் ஆதாயநோக்கத்துடன் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் வெளியாருக்கும் செய்துவருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது,

பொதுமக்களின் வரிப்பணத்தைக் கொண்டு பொதுமக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய இச்சபை, எசமான விசுவாசமற்ற ஊழியரின் தகாத போக்கால் வரியிறுப்பாளர் வஞ்சிக்கப்படுவதை

(6-ம் பக்கம் பார்க்க)

'யாழ்ப்பாணம்

## உஷ்ணபூமிதான்; ஆனால் மக்கள் நல்லவர்கள்'

### போலந்து தூதரக பிரதிநிதி பேட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

'யாழ்ப்பாணம் சிறிது வெப்ப சுவாத்தியமுள்ளதாக இருந்தாலும் இங்குள்ள மக்கள் கடும் உழைப்பாளிகளாகவே காணப்படுகின்றனர். யாழ்ப்பாண மக்கள் நல்ல சுபாவமுள்ளவர்கள் என்பதுவே எனது அபிப்பிராயம்.'

இவ்வாறு இலங்கையிலுள்ள போலந்து ஸ்தானிகராலய வர்த்தக பிரதிநிதி, திரு. ஜோசேவ் சாக்கிவிக்ஸ் நேற்று 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விஜயம் செய்தபோது நமது நிருபருக்களித்த விசேஷ பேட்டியொன்றில் தெரிவித்தார்,

குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற கலைவிழாவில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்த திரு. சாக்கிவிக்ஸ் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் உள்ள தொழிலாளர்கள் பொதுவாக காட்கூலிகள் நல்ல சம்பளம் பெறுவதாக நான் அறிந்தேன் இது பற்றி நான் மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாண மக்கள் தமது உழைப்பின்மூலம் மேலும் முன்னேற்ற மடைய வேண்டுமென்பதுவே நான் அவர்களுக்கு விடுக்கும் செய்தி.

போலந்தின் கைத்தொழில் வளர்ச்சி பற்றி அவர் தெரிவிக்கையில் போலந்து கைத்தொழிலில் முன்னேறிவருகிறதென்றும் தனக்குத் தேவையான பெரிய இயந்திரசாதனங்களை கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் பெற்று வருகிறதெனவும் குறிப்பிட்டார்.

திரு. ஜோசேவ் சாக்கி இரண்டாவது உலக யுத்தத்தில் சுதந்திர போலந்து விமான சேவையில் சேர்ந்து பல போர் முனைகளில் எதிர்ப்புகளைச்சமாளித்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் சந்தித்து பேசுவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் அரசாங்க ஊழியர் நிலை சம்பந்தமாக நேற்றுமுன் தினம் ராசாங்கமந்திரி, ஸ்தல ஸ்தாபன மந்திரி ஆகியோரை தமிழரசு கட்சித்தலைவர் திரு எஸ். ஜே வி செல்வநாயகம், திரு ஏ அமிர்தலிங்கம், திரு வி நவரத்தினம் ஆகியோர் கொழும்பில் சந்தித்துப் பேசினர்.

இதுசம்பந்தமாக இருதரப்பினரும் மீண்டும் விரைவில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

## நாளை மேதினம்

பம்பலப்பிட்டி, வியாழன்

நாடெங்கும் நாளை மேதினக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. தேசிய அரசாங்கத்தின் மேதினக் கொண்டாட்ட ஏற்பாட்டுச் சபையினர் செய்துள்ள ஒழுங்குகளின்படி கலாசார அடிப்படையில் இக்கொண்டாட்டங்கள் நடைபெறும். ஊர்வலங்கள் பொதுக்கூட்டம் மற்றும் நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெறுகின்றன.

இக்கொண்டாட்டத்தில் யு என் பி, எம் ஈ பி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜாதிகவிமுக்திப் பெரமுனை, தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ் ஆகியவைகளும் திரு தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளும் தொழிலாளர்களும் கலந்து கொள்வர்.

#### சிறிமா தலைமை

முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித்தலைவருமான திருமதி பண்டாரநாயக்கா இடதுசாரி மேதின ஊர்வலத்துக்குத் தலைமைதாங்கச் செல்வார். பொரளையிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் சுதந்திரசதுக்கத்தைப் போய்ச் சேர்ந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும். ஊர்வலத்தில் ஒரு 'ஜீப்' வண்டியில் திருமதி பண்டாரநாயக்காவும் அவருக்கு இரு

## "விளைவுகளை பாகிஸ்தான் அதிபர் சிந்திக்க வேண்டும்

### அமெரிக்க ஆயுதங்களை இந்தியா உபயோகிக்கவில்லை"

— சாஸ்திரி

புதுடில்லி, ஏப். 27

இந்திய எல்லைமீது பெரிய அளவில் தாக்குவதினால் ஏற்படக்கூடிய விளைவுகளை பாகிஸ்தான் அதிபர் சிந்தித்துப் பார்த்தாரா என்பது தமக்குத் தெரியவில்லை என்றும், ஆனால் நாட்டின் நிர்வாகத் தலைவர் என்ற முறையில் அவர் இதை உணரவேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி இங்கு அறிவித்தார்.

கட்ச் பகுதியில் பாகிஸ்தான் தொடர்ந்து தாக்குதலை நீடித்தால், அதன் விளைவுகள் மோசமாக இருக்கும் என பாதுகாப்புசபைக்கு இந்தியா அறிவித்த பின்பு சாஸ்திரி இவ்வாறு கூறினார்

இப்போது பாகிஸ்தான் ஒரு பிரிகேட் துருப்புகளையும் கவச வண்டிகளையும், டாங்கிகளையும், பீரங்கிகளையும் கொண்டு கட்ச் பகுதியில் தாக்கி வருகிறது. இவற்றின் பின்னணியில் ஏராளமான காலாட் படைகளும், 12-வது குதிரைப் படையும், 19-வது படைப்பிரிவும், கவசப்படைகளும், 51-வது காலாட்படை பிரிவும், பீரங்கி ரெஜிமெண்டும் குவிக்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதர்களிடம் குறைபாடுகளிருக்கும், கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால் ஒருவருக்கொருவர் விரோதம் இருப்பதா கவோ, ஒருவரோடொருவர் சேரமாட்டரென்றோ எண்ணுதல் சரியல்ல.

— விநோபாஜி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 18 உ. (30-4-65)


## மீன்பிடித் தொழில் அபிவிருத்தி

இலங்கையில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மீன்பிடிக் கூட்டுறவு ஸ்தாபனம் அத்துறையில் ஆற்றலும் அறிவுமுள்ள நிபுணர்களைக் கொண்டு தயாரித்துள்ள பத்துவருடத் திட்டமொன்றை கைத்தொழில் மீன்பிடிமந்திரி வெளியிட்டுள்ளார். இதன்விபரம் சரியாகத் தெரியவில்லையாயினும் நீண்டகாலமாகத் தேவைப்பட்ட ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு இங்கு நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு மீன்வளம் இருக்கிறது. ஆனால் சரியான முறையில் மீன்பிடித் தொழிலை இதுவரை அபிவிருத்தி செய்யாததால் வெளிநாடுகளிலிருந்து மீன் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் நாடு உள்ளது. நவீனமுறையில் மீன்பிடித் தொழிலை விருத்தி செய்தால் சுயதேவையைப் பூர்த்தியடைவதுடன் வெளிநாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பும் கிடைக்கும். இதன் மூலம் நாட்டின் வருமானமும் அதிகரிக்கும்.

இயந்திர மீன்பிடிப்படகு, மற்றும் நவீன மீன்பிடி உபகரணங்களும் மீன்பிடித் தொழிலில் மேலும் பலரை ஈடுபடச் செய்வதும் இத்தொழில் விருத்திக்கு அவசியத் தேவை. மீன்பிடித் தொழிலில் நவீன முறைகளைக் கையாண்டு அதில் வெற்றியீட்டியுள்ள ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்தும் இந்தியாவில் திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்திலிருந்தும் இத்தொழில்விருத்திக்கு இலங்கை ஆலோசனையும் உதவியும் பெறலாம். ஆழ்கடலில் மீன்பிடிப்பதை விருத்தி செய்வதுடன் இலங்கையின் உள்பகுதிகளிலுள்ள ஆறுகள், குளங்கள், ஏரிகளிலும் அதிகமான மீன்கள் இருக்கின்றன. இவைகளையும் நவீனமுறையைப் பயன்படுத்தி பிடிக்கலாம்.

திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் அதைச் சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு நிதி அவசியம். இப்பொழுது இலங்கையில் பொருளாதாரத் தட்டுப்பாடு நிலவுகிறது நிறைசேரி காவியாக இருப்பதாக நிதிமந்திரி தெரிவிக்கிறார். என்றாலும் நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்யக் கூடியதுடன் வெளிநாட்டு வருமானத்தையும் தேடித்தரக் கூடிய நல்ல திட்டங்களை எவ்விதத்திலும் நிறைவேற்ற வேண்டும். மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடன் எழுப்பலாம். அதற்கு நிச்சயம் ஆதரவும் கிடைக்கும்.

நிபுணர்களின் சரியான ஆலோசனையுடனும் மக்களின் ஒத்துழைப்புடனும் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றுமென்று எதிர் பார்ப்போம்.

## பஸ்நிலையத்தில் துர் நாற்றம்

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் உள்ள பள்ளங்களில் மழை பெய்யும் பொழுது தண்ணீர் தேங்கி நின்று அதிலிருந்து துர்நாற்றம் வீசுவதால் அங்கு பிரயாணிகள் நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, இதனால் தாங்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் சாவகச்சேரி நகரசபையினர் எந்தவிதநடவடிக்கையும் மேற்கொள்ளாதது வருந்தத்தக்கதெனவும் பஸ் நிலையத்தில் உள்ள கடைக்காரர்களும் பஸ் பிரயாணிகளும் புகார் தெரிவித்துள்ளனர்.

## புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது

சுழிபுரம், வியாழன்

தற்போது தினமும் பெய்து வரும் மழையினால் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் பலத்த நஷ்டத்துக்குள்ளானதுடன் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். சிகரெட் புகையிலை அறுவடை செய்யும் பருவம் இம்மாதமாகும். பீடி புகையிலை உலர்வதற்கு அதிகம் வெய்யில் தேவை. வெய்யில் தேவையான காலத்தில் மழை பெய்துள்ளதால் இப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு பெரு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் சிகரெட் புகையிலை பயிர்செய்தவர்களில் பலர் நேற்று பகல் அறுவடை செய்தனர்.

## லண்டன்பரீட்சையை நடத்துக

பம்பலப்பிட்டி, வியா.

லண்டன் ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையை இலங்கையில் மீண்டும் நடத்துமாறு தேசிய மாணவர் சங்கமும் ஸ்ரீலங்கா சிஷ்ய சன்விதானயவும் கூட்டாக கல்விமந்திரியைக் கேட்டுள்ளன.

மேற்படி பரீட்சை நிறுத்தப்பட்டதால் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் இக்கட்டான நிலையில் நிறுத்தப்பட்டுள்ளார்களென மேற்படி சங்கங்கள் மந்திரிக்கு எடுத்துக் கூறியுள்ளன.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை 6 மணி முதல் 8 மணி வரை அகில இலங்கை பொதுஜனசேவை சங்கசமயப் பிரசாரசபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நடைபெறவிருக்கின்றன: வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரதேவஸ்தானத்தில் ஸ்ரீமத். சி. எஸ். ஏ. மணிபாகவதரின் மகாபாரத விரிவுரை ஆரம்பமாகும் காரியாதிகாரி திரு செ. சிவஞானம் தலைமைதாங்குவார்

நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகராலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் "சேக்கிழார்" என்னும் பொருள்பற்றியும், நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் திரு த. சுப்பிரமணியம் "திருவாசகம்" என்னும் பொருளைபற்றியும், கதாப்பிரசங்கம் நிகழ்த்துவர்.

# '1958 சம்பவங்கள் நல்ல படிப்பினையாக இருக்கவேண்டும்'

## செனட்டில் நடேசன் பேச்சு

பம்பலப்பிட்டி, வியாழன்

"மொழி பிரச்சினைதான் நாட்டில் ஒற்றுமையின்மையையும், அமைதியின்மையையும் தோற்றுவித்தது. சில அரசியல் கட்சிகள் தாம் பதவியிலிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் நாட்டின் நலனைப்பற்றி அக்கறைப்படாது நடந்துகொண்டுள்ளார்கள்" என செனட் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதத்தில் பேசுகையில் செனட்டர் எஸ். நடேசன் கூறினார்.

செனட்டர் நடேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1944ம் வருடத்திலிருந்து 1954ம் வருடம்வரை திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக இருக்கவேண்டுமென்றே உறுதி கொண்டிருந்தார். 1956ம் வருடத் தேர்தலின்போது சேர் ஜோன் கொத்தலாவலை அரசியல் சாஸனத்தைத் திருத்திச் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப் போவதாகத் தெரிவித்ததால் ஏற்பட்ட தீவிரவாதிகளின் கிளர்ச்சியால் திரு. பண்டாரநாயக்காவின் கட்சி தனது கொள்கையை மாற்றியமைத்தது.

இதைத் தொடர்ந்து 1955ம் வருடத்தின் பிற்பகுதியில் திரு. பண்டாரநாயக்காவின் கட்சி சிங்களம் இந்த நாட்டின் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமென்றும் தமிழுக்கு நியாயமான உரிமை அளிக்கப்படவேண்டுமென்றும் தனது கொள்கையை வெளியிட்டது.

சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் தாம் கடைப்பிடித்துவந்த மொழிக்கொள்கையை விட்டுக்கொடுக்காமல் கடைப்பிடித்துவந்தன.

பெரும்பான்மை சிறுபான்மைச் சமூகங்களின் தலைவர்கள் கலந்து பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலந்தான் மொழிப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வுகாணலாம். இந்தப் பிரச்சினையைக் கட்சியரசியலுக்கப்பால் ஆராய்வதால் ஒரு ஜனநாயக ரீதியிலமைந்த முடிவுகாணலாம். திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும், திரு. டட்லி சேனநாயக்கா உட்பட இந்த நாட்டிலுள்ள அநேகமான அரசியல் கட்சித் தலைவர்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இவ்விதமுறையையே சிபார்சுசெய்துள்ளனர்.

1956ம் வருடம் ஜூன் மாதம் 5ந் தேதி மொழி மசோதா விவாதிக்கப்படுமுன்னர் பல தீவிர வகுப்புவாதிகள் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்தனர். தமிழர்களுக்கெதிராகவே துவேஷம் கிளப்பிக்கொண்டிருந்தனர். (தனிச்சிங்கள) மொழி மசோதாவை எதிர்த்து காலி முக மைதானத்தில் 200 தமிழரசு ஆதரவாளர்கள் சத்தியாக்கிரகம் செய்ய முயற்சித்தபோது அவர்கள் வெகுவாகத் துன்புறுத்தப்பட்டார்கள். பொலிஸாரின் முன்னிலையிலேயே அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இதைத் தொடர்ந்து பல பகுதிகளிலும் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். இவற்றையெல்லாம் பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர். இதனைத் தடுக்க கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

1958ம் வருடம் ஜூன் மாதத்தில் இலங்கையில் நடைபெற்ற சம்பவங்கள் அரசாங்கம் கட்டுப்படுத்தாத வகுப்புத் துவேஷத்தால் என்ன விளைவுகள் ஏற்படுமென்பதனை நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டும். சகல அரசியல் கட்சிகளும் இதனைப் படிப்பினையாகக் கொண்டு நடந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வது மிகையாகி விடாது.

## ரூ. 3 லட்சம் கைலஞ்சம்

### பெண்மணி வாங்கினாராம்

பம்பலப்பிட்டி, வியா.

கூட்டரசாங்கத்துடன் ஈடுபாடுடையவரும், உயர்தர வட்டாரங்களில் புழங்குபவருமான ஒரு பெண்மணி மீது மின்சாரக் கம்பனி ஒன்று லஞ்ச ஊழல்புகார் குற்றம் சாட்டியுள்ளது. அரசாங்க ஒப்பந்தம் ஒன்று சம்பந்தமாக 3 லட்சம் ரூபாவை இப்பெண்மணி கைலஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது; 3 லட்சம் ரூபாவிலும் 1 லட்சத்தை தான எடுத்துக்கொள்வதாகவும், மிகுதி இரண்டு லட்சத்தையும் உயர்ந்த அதிகாரி ஒருவருக்கு கொடுக்கப் போவதாகவும் அப்பெண்மணி தெரிவித்திருந்தாராம். லஞ்சக்கமிஷனர் இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் இப்பெண்மணியை கண்டுபிடித்து விசாரணையை விரைவில் நடத்த முயற்சி எடுத்து வருகின்றனர்.

## தமிழரசு கிளை அங்குரார்ப்பணம்

பருத்தித்துறை, வியா.

அகிலஇலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளையொன்று அல்வாய் வடக்கில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

திரு. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உடுப்பிட்டித்தொகுதித் தமிழரசுக்கட்சிக் கிளைத் தலைவர் திரு. க. ஜெயக்கொடி கிளையை ஆரம்பித்துவைத்து உரைநிகழ்த்தினார்.

பருத்துத்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இக்கிளைக்கான அலுவலகம் ஒன்றைத் திறந்துவைத்தார்.

இட்டுசாரிகளின் உண்மையான நிலையை இப்போது தமிழ்பேசும்மக்கள் உணர வாய்ப்பு ஏற்பட்டுவிட்டதென வும் இனியும் அவர்களைத் தமிழ்பேசும் மக்கள் நம்பமாட்டார்களெனவும்திரு. துரைரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. வே. சிவக்கொழுந்து, திரு. க. திருநாவுக்கரசு உட்பட வேறு பலரும் கூட்டத்தில் பேசினர்கள்.

## 'வேலையிழந்தவருக்கு வேலை வழங்குக'

பம்பலப்பிட்டி, வியா.

சமீபத்தில் வீசிய சூறுவளி காரணமாக வேலையிழந்துள்ள தலைமன்னார் துறைமுகத்தில் கடமையாற்றிவந்த தொழிலாளர்களுக்கு காங்கேசன்துறை, திருக்கோணமலை, காலி அல்லது கொழும்பு துறைமுகங்களில் வேலை கொடுக்குமாறு நியமன எம். பி. திரு. ஏ. அண்ணாமலை தொழில், வேலை, வீட்டமைப்பு மந்திரியைக் கோரியுள்ளார்.

சூறுவளி காரணமாக 46 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர் என்றும் இவர்கள் 18 வருடத்துக்கு மேலாக பசலையிலிருந்தவர்களென்றும் வேலையிழந்துள்ளதால் இவர்களது குடும்பங்கள். இப்போது மிகவும் கஷ்டநிலையில் இருப்பதாகவும் திரு. அண்ணாமலை மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாடும் நடப்பும்

தமிழரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் ஒப்பந்தம் ஏதாவதுண்டா? இந்தக் கேள்வி ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பலர் கேட்டனர்.

டட்லிக்கும் செல்வநாயகத்துக்குமிடையில் ஒப்பந்தம் இருக்கத்தான் வேண்டும். இலலாவிடில் அவர்கள் எப்படி ஒன்றுசேர முடியும்? என்பது எதிர்க்கட்சியிலுள்ள ஒரு அங்கத்தவரின் வாதம்.

"எல்லோரும் முதலாளித்துப் பிற்போக்கு வாதிகள் அதனால் தான் ஒன்றுசேர்ந்துள்ளனர்" என்பது மற்றொரு அங்கத்தவரின் கூற்று.

இப்பொழுது தமிழரசு—யு. என். பி. ஒப்பந்தம் பற்றிய கேள்வி செனட்சபையில் கேட்கப்படுகிறது.

"ஒப்பந்தம் ஏதாவது இருந்தால் பார்லிமெண்டில் சரியான சமயத்தில் சமர்ப்பிப்பேன்" என்று பிரதமர் பதிலளித்துவிட்டார்.

தமிழரசு—யு. என். பி. ஒப்பந்தம்பற்றி மீண்டும் பார்லிமெண்டில் குரல் ஒலிக்கவிருக்கிறது. தோம்பே பிரதிநிதி திரு பீலிக்ஸ் "ஒப்பந்தம்" பற்றிய கேள்விக்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

'ஒப்பந்தம்' 'சிங்களச் சட்டம்' இரண்டும் இன்னும் சில வருடங்களுக்கு எதிர்க்கட்சியினருக்கு 'ஆயுதமாக' உபயோகிக்கப்படலாம்.

* * *

'ஆனந்தவிகடன்' சஞ்சிகையில் ஒருகேலிச் சித்திரம் வெளியாகியிருக்கிறது. ஒரு வீட்டில் பலர் கூடியிருக்கின்றனர். அவர்கள் மத்தியில் ஒருவர் பேசிக்கொண்டிருக்கிறார். "சர்க்காரால் தீர்க்கவே முடியாததும், அடுத்ததேர்தல் வரை போராட்டம் நடத்துவதற்கு ஏற்றதுமான ஒரு பிரச்சினையைத் தேர்ந்தெடுப்பதற்குத்தான் இந்த இரகசியக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது..." என்று அவர் கூறுகிறார்.

* * *

நமது எதிர்க்கட்சி அரசியல் வாதிகளும் இப்படியொரு கூட்டம்கூடி ஒரு பிரச்சினையை மட்டும் தெரிவுசெய்யலாம்.

* * *

'தி. மு. க. தலைவர் சி. என். அண்ணாதுரையை இலங்கையில் காலவைக்க அனுமதிக்கக்கூடாது' என்று 'எத்த' என்ற சிங்களத் தினசரி இம் மாதம் 27-ந் திகதி அப் பத்திரிகையில் முதல் பக்கத்தில் கொட்டையெழுத்தில் எழுதியுள்ளது. 'இலக்கிய விழா' என்ற போர்வையில் தி. மு. க. தலைவர்களும் 'நாம் தமிழ' இயக்கத்தினரும இங்குவந்து சமஷ்டிவாதிகளுடனும் தொண்டமனுடனும் இரகசியப் பேச்சு நடத்தவிருப்பதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகிலுள்ள தமிழர்களைக் கொண்ட தனித்தமிழ் ராஜ்யம் அமைக்கக் கனவுகாணும் இத்தலைவர்கள் இச்சமயத்தில் இங்குவர அனுமதியளிப்பது பேராபத்தானது. என்று எத்த' பத்திரிகையின் அந்தச் செய்தி கூறுகிறது. முன்னைய அரசாங்கம் ஆட்சியிலிருந்த காலத்தில் தி. மு. க. தலைவர்களோ, 'நாம் தமிழர்' இயக்கத்தினரோ இங்குவர அனுமதிக்கப்படாததுடன் அந்த இயக்கங்களின் கிளைகளை இங்கு திறக்கவும் அனுமதிக்கப்படவில்லை யென்றும் அது கூறுகிறது.

'தனித் தமிழ்நாடு' அமைக்கப் போரடும் அரசியல்வாதிகளல்லாத தமிழ்க்கல்விமான்கள் எத்தனைபேரை வேண்டுமானாலும் தமிழ்மறைக் கழகம் அழைக்கட்டும் என்றும் 'எத்த' கூறுகிறது. பெரிய காரியம்!

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 10 பாகிஸ்தானிய டாங்கிகள் நாசம்: இரு தரப்பாரும் பீரங்கி பிரயோகம்

## ஆக்கிரமிப்பின் விளைவுகளுக்கு பாக். பொறுப்பு என ஐ.நா.வுக்கு அறிவிப்பு

### கட்சில் 45 டன் அமெரிக்க 'பேடண்ட்' டாங்கிகள் உபயோகிக்கப்பட்டனவாம்

நியூயோர்க், ஏப்ரல் 29

**கட்ச் பகுதியில் பாகிஸ்தான் தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடத்தி வருவதாயும், இதனுல் ஏற்படவிருக்கும் விளைவுகளுக்கு பாகிஸ்தானே பொறுப்பு வகிக்க வேண்டும் என்றும் இந்தியா பாதுகாப்புசபைக்கு அறிவித்திருக்கிறது.**

இதற்கிடையில் கட்ச் ரன் பகுதியில் பாகிஸ்தான் உபயோகித்த 85 டன் நிறையுள்ள அமெரிக்க பேட்டன் டாங்கிகளின் புகைப்படங்கள் நேற்று வெளியிடப்பட்டன. அமெரிங்காவின் மிகப்பெரிய நவீன டாங்கிகள் இவை. ரன்னில் இத்தகைய 10 டாங்கிகளை இந்தியத் துருப்புகள் நாசமாக்கியதாக அறிவிக்கப்பட்டது.

#### இந்தியா மறுப்பு

நேற்று ரன் பகுதியில் இரு தரப்பினரும் பீரங்கிப்பிரயோகம் செய்து கொண்டனர் என்றும் இருசாராருக்குமிடையே தொடர்பு எதவும் இருக்கவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது. அதேசமயம் 24-வது அட்சரேகைக்கு தெற்கே இந்தியத் துருப்புகள் பின்வாங்கியதாக பாகிஸ்தான் கூறுவது அபாண்டமான பொய் எனப் புதுடில்லியில் வெளிவிவகார இலாகா மறுப்புத் தெரிவித்தது.

1931-ம் ஆண்டு கட்ச்பகுதி சம்பந்தமாக பிரசுரிக்கதபட்ட நிலப்படங்களும் நேற்று வெளியிடப்பட்டன. பாகிஸ்தான் கோரும்பகுதி சிந்து மாகாணத்தின் பாகம் அல்லவென்பது இப்படங்களில் காட்டப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

#### அமெரிக்கா மறுப்பு

இந்தியாவும் பாகிஷ்தானும் பரஸ்பரம் ஒன்றுக்கு எதிராக மற்றென்று அமெரிக்க ஆயுதங்களை உபயோகிக்காதுஎன ஏற்கெனவே உத்தரவாதம் வழங்கப்பட்டிருப்பதாய் வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினர்.

#### யு. எஸ்., பிரி. தூதர்கள் சந்திப்பு

நேற்று இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியை பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. பிரீமன் இருமுறை சந்தித்துப் பேசினர். பிரிட்டிஷ்பிரதமர் திரு. வில்சன் சாஸ்திரிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றை அவர் அப்போது ஒப்படைத்தார். அதேசமயம் அமெரிக்க ஸ்தானிகர் திரு. செஸ்டர் பவுல்ஸ வெளிநாட்டுமந்திரி திரு. சுவர்ண்சிங்கைச் சந்தித்துப் பேசினர்.

#### லோகசபைவிவாதம்

நேற்று லோகசபையில் கட்ச் நிலைமைபற்றி ஆறரை மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

பிரதமர் சாஸ்திரி இவ்விவாதத்தில் பேசியபோது, நட்புநாடுகள் கேட்டுக்கொண்டதற்கேற்ப யுத்தநிறுத்தத்திற்கும், சமாதானப் பேச்சுக்கும் தயாராய் இருப்பதாயும், ஆக்கிரமிப்பை இந்தியா சகிக்காது என்றும் கூறினர். சமாதானம் சாத்தியமில்லை என்னுல் வேறுமுறைக்கும் இந்தியா தயாராய் இருப்பதாயும் அவர் அறிவித்தார்.

ஆக்கிரமிப்பாளர்களை எல்லைக்கப்பால் விரட்டியடிக்க வேண்டுமென நேற்று சபை தனது உறுதியைத் தெரிவித்துக் கொண்டது. இவ்விஷயத்தில் மக்களின் ஏகோபித்த ஐக்கியத்தையும் அது வெளிப்படுத்தியது. சீனுவும் பாகிஸ்தானும் ஒன்று சேர்ந்திருப்பது போல் தோன்றுகிறது என்றும்எனவே அவசியமான-உறுதியான, பயனுள்ள யுக்திகளை ராணுவம் கையாளும் என்றும் பிரதமர் சபையில் அறிவித்தார்.

#### கனடா தயார்

இந்தியா-பாகிஸ்தான் இரு நாடுகளுக்குமிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்துவதில் காமன்வெல்த் நாடு என்ற முறையில் உதவிபுரிய கனடா தயாராய் இருப்பதாக பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் கூறியிருக்கிருர். கட்ச் சம்பவத்திஞல் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாடு பாதிக்கப்படாது என நம்புவதாயும் அவர் கூறினர்.

#### சாஸ்திரி

இனி சண்டை நிறுத்தம் பாகிஸ்தானையே பொறுத்திருக்கிறதென்றும் பாகிஸ்தான் முந்திய நிலைக்குத் திரும்பத் தயாராய் இருந்தால் பெரிய போரைத் தடுத்ததாக இருக்கும் என்றும் பிரதமர் சாஸ்திரி அறிவித்திருக்கிருர். பெரிய போரைத் தடுத்தால் இந்தியாவுக்கும் உலகுக்கும் அது நல்லது என அவர் கூறினர்.

#### பொறுமைக்கும் எல்லையுண்டு

மிகநெருக்கடியான தருணம் இது என்றும் இந்தியாவும் பாகிஸ்தானும் சரித்திரத்தின் நாற்சந்தியில் நிற்கின்றனஎன்றும் அவர் கூறினர். "சமாதானமே நமது குறிக்கோள் ஆயினும் சமாதானப் பாதையில் நாம் மட்டும் தனியே நடக்க முடியாது. உண்மை நிலையை அறிவதே இப்போதைய பிரச்னை. இதை நிபுணர்கள் செய்ய முடியும்.

"எல்லைச்சண்டையில் பாரதத்துக்கு அக்கறை கிடையாது. இவ்விஷயத்தில்பாகிஸ்தானின் பொய்ப்பிரசாரத்துடன் நம்மால் போட்டிபோடவும் முடியாது. ஆனல் பொறுமைக்கும் ஒருஎல்லை உண்டு" என்ருர் சாஸ்திரி.

"பாகிஸ்தான், சீனுவின் அபாயம் நீடித்தால் முழுவல்லமையுடன் அதை எதிர்நோக்குவோம், நெஞ்சுரத்துடன் செயலாற்றுவோம். பாகிஸ்தான், சீன இருநாடுகளைத் தவிர கிழக்கிலும் மேற்கிலுமுள்ள எல்லா நாடுகளுக்கும் நமது நண்பர்கள்" என்றும் அவர் கூறினர்.

பாகிஸ்தானின் கொள்கையில் மாற்றமும் முரண்பாடும் காணப்படுகின்றன என்பதை சாஸ்திரி விளக்கியபின் கட்ச் பகுதியில் பாகிஸ்தானின் உரிமையை இந்தியா நிராகரிக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

#### ஜோன்ஸன் நம்பிக்கை

இதற்கிடையில் கட்ச்-ரான் பகுதியில் சண்டை முடிவடையும் எனத்தாம் நம்புவதாக அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிருர். "நிலைமையை அமெரிக்காகவனித்து வருகிறது, நட்புநாடுகளுக்கிடையே பூசலைத் தவிர்க்க வழி காணப்படும். அமைதியை ஏற்படுத்த ஆவன செய்வதில் அமெரிக்கா ஆவல் கொண்டிருக்கிறது" என்றும் அவர் கூறினர்.

கிழக்குப் பாகிஸதான் எல்லையிலும் கச்சார் ஜில்லாவிலும் கோல்பாரா பகுதியிலும் பாகிஸதான் பெருமளவில் துருப்புகளை குவித்திருப்பதாய் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஓரிடத்தில் கிழக்கு பாகிஸதான் துப்பாக்கிப்படையினர் இந்தியப் பகுதிக்குள் அத்துமீறிப பிரவேசித்து பிரஜைகளைத் துன்புறுத்தியதாய் அறிவிக்கப்பட்டது.

---

## ஷேக் இன்று திரும்பவில்லை

புதுடில்லி, ஏப்ரல் 29

நாளை இந்தியா திரும்பவிருந்த ஷேக்அப்துல்லா அவ்வாறு திரும்ப முடியவில்லையென இந்திய அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிருர். அவரது பாஸ்போர்ட் காலம் நாளையுடன் முடிவடைகிறது.

---

## பக்தூன்-பாக். கைகலப்பு

காபுல், ஏப்ரல் 29

பக்தூனிஸதான் தேசியவாதிகள் பாகிஸதான் துருப்பு நிலை ஒன்றின்மீது தாக்குதல் நடத்தியதாயும், 8 தேசியவாதிகள் மாண்டனரென்றும் 12 பேர் காயமடைந்தனரென்றும் காபுல் ரேடியோ அறிவித்தது. பாகிஸதான் தரப்பில் இதைவிட அதிக சேதம் ஏற்பட்டதாம்.

## ஆளில்லா யு. எஸ். விமானம் சுடப்பட்டது

ஹாங்காங் ஏப்ரல் 29

விமானியில்லாத அமெரிகக வேவு விமானம் ஒன்று மத்திய சீனுவின் மேலாக வேவு பார்க்க பறந்துசென்றபோது சுட்டுவீழ்த்தப்பட்டது.

இது மிக உயரத்தில் பறக்கும் விமானமென்றும் சீன ராணுவத்தைச் சேர்ந்த விமானப் படையினர் இதைச் சுட்டுத்தள்ளினரென்றும் பீகிங் ரேடியோ அறிவித்தது.

---

## ஜாப். பிரதமருக்கு சாஸ்திரி கடிதம்

டோக்கியோ, ஏப்ரல் 29

ஜப்பானிலுள்ள இந்தியத் தூதர் பிரதமர் சாஸதிரியின் கடிதமொன்றை ஜப்பானியப் பிரதமர் திரு. ஸாட்டோவிடம் ஒப்படைத்தார்.

## 350 இந்திய வீரர் மாண்டனர் பாகிஸ்தான் அறிவிப்பு: பாரதமும் அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்ததாய் புகார்

கராச்சி, ஏப். 29

**கட்ச் சண்டையில் 350 இந்தியர்கள் இதுவரை கொல்லப்பட்டதாயும், இரு அதிகாரிகள் (ஒரு மேஜர், 2-வது லெப்டினண்ட்) உட்பட 45 இந்தியா சிறைப்பிடிக்கப்பட்டதாயும் பாகிஸ்தான் வெளிவிவகார இலாகா அறிவித்திருக்கிறது.**

வெளிவிவகார மந்திரி திரு. பூட்டோ விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் ஹைதாரபாத், ஜூனகாத், ஜம்மு, காஷ்மீர், சமீபத்தில் தஹரகிராம் ஆகிய இடங்களில படைப்பலத்தைக் கொண்டு பிரச்னையை தீர்க்க முயன்றதுபோலவே. இப்போது கட்சிலும் இந்தியா படலத்தை உபயோகித்து உரிமை கொண்டாட முயல்கிறது எனக் குற்றஞ்சாட்டியிருக்கிருர்.

இதற்கிடையில் பியர்பேட்டும், அதற்குத் தெற்குப் பகுதியும் பாகிஸ்தான் வசமே இருப்பதாயும், பாகிஸ்தான் பத்திரிகை நிருபர்கள் நேற்று அங்கு அழைத்துச் சென்று காட்டப்பட்டதாயும் இப்பகுதியிலுள்ள பாகிஸ்தான் ராணுவ தளபதி கூறினர்.

சேதவிபரம் பற்றி இந்தியா அறிவித்துள்ள விபரம் பொய்யானது என்றும், 20 பாகிஸதானியரே கொல்லப்பட்டனர் என்றும், ஆனல் 350 இந்தியர் கொல்லப்பட்டனர் என்றும் பாகிஸதான் அறிவித்திருக்கிறது.

இந்தியர்கள் 2000 பீரங்கி குண்டுகளைப் பொழிந்தார்கள் என்றும், பாகிஸதானும் பதிலுக்கு அதே அளவு பொழிந்தது என்றும் வெளிவிவகார இலாக அதிகாரி ஒருவர் கூறினர்.

இந்தியா அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்திருப்பதாயும், அவற்றின் போட்டோ படங்கள் பாகிஸ்தான் நிருபர்களுக்கு கொடுக்கப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

கட்ச் பகுதியில் கடந்த மூன்றரை மாதங்களாக இந்தியா படைகளையும் சாதனங்களையும் குவித்தது என்றும் பாகிஸதான் அதிகாரி குறிப்பிட்டார்.

---

## வியட்காங்கியர் அரசாங்க நிலை ஒன்றை பிடித்தனர்

சைகோன், ஏப். 29

அமெரிக்க, தென்வியட்னமிய விமானங்கள் நேற்று வட்வியட்னுமில் சாலைகள், கப்பல்கள், பாலங்கள், படை இலக்குகள் ஆகியவற்றை கடுமையாகத் தாக்கின என்றும், இதனுல் பலத்த சேதம் ஏற்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் சைகோனுக்கருகே அரசாங்க நிலை ஒன்றை வியட்காங் துருப்புக்கள் கைப்பற்றிக்கொண்டனர் என்றும், இச் சண்டையில் 35 அரசாங்கத்துருப்புக்கள் மாண்டு, 10 பேர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

வியட்காங்கியர் வேஞேர் இடத்தில் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியானுர். 36 பேர் காயமடைந்தனர்.

இதற்கிடையில் கம்போடிய கிராமம் ஒன்றை தென்வியட்னும் விமானங்கள் ராக்கெட் குண்டுகளை வீசித் தாக்கியதாயும், இதனுல் கணிசமான சேதம் ஏற்பட்டிருப்பதாயும் கம்போடியா புகார் கூறியிருக்கிறது.

---

## டொமினிகனில் அமெரிக்க துருப்புகள் இறங்கின

வாஷிங்டன், ஏப். 29

டொமினிக்கன் குடியரசில் அமெரிக்க துருப்புக்களை இறக்க ஜனதிபதி ஜோன்ஸன் உத்தரவிட்டிருக்கிஞர். அங்கு தற்போது நடைபெற்றுவரும் சண்டை காரணமாக அமெரிக்க பிரஜைகளின் உயிருக்கு அபாயம் ஏற்பட்டிருப்பதாயும், அவர்களை பத்திரமாக வெளியேற்றும் முயற்சியில் அமெரிக்கத் துருப்புகள் ஈடுபடும் என்றும் அவர் கூறினர்.

இதர நாடுகளும் உதவி கோரியிருப்பதாயும், எனவே இதரநாட்டுப் பிரஜைகளையும் அமெரிக்கத் துருப்புக்கள் பத்திரமாக வெளியேற்றும் என்றும் அவர் கூறினர்.

ஏற்கனவே 400 அமெரிக்க மாலுமி துருப்புக்கள் அங்கு இறங்கியிருக்கிஞர்கள்.

---

சேது சமுத்திரம்

## கிழக்கத்திய பனமா

பெங்களூர், ஏப்ரல் 29

சேது சமுத்திரத் திட்டம் எதிர்பார்ப்பதற்கு முன்பே விரைவில் நிறைவேறுமென ரயில்வே மந்திரி திரு. பட்டீல் கூறினர். அது கிழக்கு நாட்டு பனமா கால்வாயாக இருக்குமென்றும் அவர் கூறினர்.

---

ஏழுமலையானுக்கு

## சென்ற வருஷம் ரூ. 12 லட்சம்

திருப்பதி, ஏப்ரல் 29

திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு சென்ற மார்ச் மாதத்து வருமானம் ரூபா 11,69,620-46 கிடைத்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆங்கிலக் கால்வாயை ஆனந்தன் நீந்துவார்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாக்குநீரிணையை 1963-ம் ஆண்டில் நீந்திக்கடந்த சட்டக் கல்லூரி மாணவரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. வி, எஸ், வி, ஆனந்தன் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலக்கால்வாயை நீந்திக்கடக்கும் முயற்சியில் ஈடுபடும் முதல் இலங்கையர் திரு. ஆனந்தனேயாகும்,

இவர் இன்னும் சில நாட்களில் லண்டன் சென்று அங்கு பயிற்சி செய்து தமது நீச்சல் முயற்சியை மேற்கொள்வார் லண்டன் பயணமாகுமுன், தாளையடிக்கும், முல்லைத்தீவுக் குமிலைட்டியிலிருந்து, வல்வெட்டித்துறைவரை 40 மைல் தூரத்தை பயிற்சி நீச்சலாக மேற்கொள்வார் அதன்பின் 100 மைல் பாத யாத்திரையையும் மேற்கொள்வார்.

திரு ஆனந்தன் லண்டனில் இருக்கும் சமயத்தில் குருதலவா சென் தோமஸ் கல்லூரி அதிபராகவிருந்த டாக்டர் ஹேய்மனின் கீழ் பயிற்சிபெறுவார். டாக்டர் ஹேய்மனே திரு ஆனந்தனை நீச்சல் துறையில் ஊக்குவித்தவராவர் திரு ஆனந்தனுக்கு இப்பொழுது 21 வயது.

## புதுவருட உத்தியோகஸ்தர்கள்

கொழும்பு, வியா.

பொதுச் சுகாதார சேவை பரிசோதகர்கள் யூனியனின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:-

தலைவர்: திரு கே அருளம்பலம், உபதலைவர்: திரு ஏ சி தம்பிப்பிள்ளை, பொதுக்காரியதரிசி: திரு கே இராசசிங்கம், தனாதிகாரி: திரு என் வைத்திலிங்கம் நான்குபேர்கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது

## அரசாங்க அதிபர்கள் ஆலோசிப்பர்

பம்பலப்பிட்டி, வியா.

புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகள் கட்டுவதுபற்றியும் அவர்களது புனரமைப்புபற்றியும் சமூக சேவைமந்திரி திரு, அசோகா கருணரத்தின வருகிற வெள்ளிக்கிழமை அரசாங்க அதிபர்களை சந்தித்துப் பேசஇருக்கும் மகாநாட்டில் ஆராயவிருக்கின்றார், புயலினால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையை தெளிவான முறையில் கலந்தாலோசிப்பதற்கும் நிவாரண வேலைத்திட்டங்களைப் பற்றி திட்டங்கள் தயாரிப்பதற்காகவுமே இந்த மகாநாடு கூட்டப்பட்டுள்ளது.

மகாணங்களிலிருந்து மகாநாட்டில் பங்குபற்றவிருக்கும் அரசாங்க அதிபர்களிடமிருந்து மந்திரி புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதத்தில் நிவாரணம் அளிக்க வேண்டும் என்றும் நிரந்தரமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய திட்டங்கள் ஏதும் உண்டா என்றும் அவர்களிடமிருந்து அறிவார், ஒரு இரவிலேயே கணவனையும் மகனையும் தகப்பனையும் இழந்தத அநாதைகளான குடும்பங்களுக்கு மந்திரி படிப்புவசதிகளையும் உத்தியோக வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளாரென்றும் தெரியவருகிறது.

ஒரு இரவிலேயே கணவனையும், புதல்வரையும், தந்தையையும் இழந்து அநாதைகளான குடும்பங்களுக்கு உதவ மந்திரி திட்டமிட்டுள்ளாரெனவும் இத்தகைய அநாதைகளுக்கு கல்விவசதிகளையும் உத்தியோக வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளாரென்றும் தெரியவருகிறது.

## ஞானசம்பந்தர் கலைமன்ற நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற மூன்றாவது ஆண்டு நிறைவுவிழாவை அடுத்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்கள்.

போஷகர்: திருமதி திருஞானசம்பந்தர், தலைவர்: திரு. மு கணேசன், உபதலைவர்: திரு. க. இராசசிங்கம், காரியதரிசி: செல்வி கு. சந்திரவதனா, உப காரியதரிசி: செல்வி மு யோகரஞ்சிதம், தனாதிகாரி: செல்வி இ. சீதாதேவி, நிலைய அதிகாரி: செல்வி இ. கதிர்காமலிங்கம், கணக்காளர்: செல்வன் கு. மகேந்திரன், முகாமைக்காரர் (தையல் பாடசாலை): திரு. க. விநாயகமூர்த்தி, நிர்வாக உதவி உத்தியோகத்தர் (தையல் பாடசாலை): திரு. கோ. குமாரவேலு. ஆறு பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## 'ஒற்றுமைவேண்டும்'

வென்னப்புவா, புதன்

'நாங்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபட வேண்டும், அத்துடன் நாட்டின் ஒற்றுமைக்காகவும் சகல மக்களின் சுபிட்சத்திற்காகவும் அயராது உழைக்கவேண்டும்' என்று சபாநாயகர் சேர் அல்பர்ட் பீரிஸ் வென்னப்புவத்தொகுதியில் அவருக்கும் வென்னப்புவத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. பெரராவிற்கும் அளித்த வரவேற்பொன்றின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

## மந்திரியின் அறிவிப்பு

பம்பலப்பிட்டி, வியாழன்

"மருந்து வகைகள் இறக்குமதியை முற்றாகப் பொறுப்பேற்றுக்கொள்ள அரசாங்கம் இப்போது திட்டமிடவில்லை" என சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்தன மருந்துவிற்பனையாளர்களின் வருடாந்த இரவு விருந்தில் கலந்து பேசுகையில் தெரிவித்தார்.

சைனிங்கோ ஹோட்டலில் நடைபெற்ற இந்த இரவு விருந்தில் மந்திரி மேலும் கூறியதாவது:

தனியாரைப் போன்று திறமையாக இந்த இறக்குமதியை அரசாங்கம் நடத்திவிட முடியாது என்றே அரசாங்கம் கருதுகிறது.

நாட்டின் கலை கலாசார விஷயங்கள் நடைபெறும்போது அரசாங்கம் அவற்றுக்கெல்லாம் ஆதரவு கொடுக்கும்."

நல்ல மருந்துகள் மலிவான விலையில் கிடைக்கக்கூடிய விதத்தில் தனிப்பட்ட வர்த்தகர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்றும் மந்திரி கேட்டுக்கொண்டார்.

## இடிவிழுந்து பனை எரிந்தது

சுழிபுரம், வியாழன்

நேற்று பிற்பகல் இப்பகுதியில் இடி முழக்கத்துடன் பலத்த மழைபெய்தது. சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் ஒரு வளவொன்றில் நின்ற பனைமரம் ஒன்றிலும் பக்கத்தே இருந்த வேலியிலும் இடி விழுந்ததால் பனையும் வேலியும் எரிந்தன.

# திருமணத்தின் பின் பிணக்கோலம்

### அரக்கனும் ஆசைநாயகியும் செய்தமுடிவு

ஒரு வருடமா, இரண்டு வருடமா? பன்னிரண்டு வருடங்களாக அவனுடைய ஆசைநாயகி அவள். அவனோ உலகமறிந்த மாவீரன், ஒரு பழம்பெரும் நாட்டின் ஒப்பில்லாத் தலைவன். ஒன்றன்பின் ஒன்றாக பதினைந்து நாடுகள் அவனுடைய படைவலிக்கு அடிபணிந்து கடைசியில் ஒரு கண்டம் முழுவதுமே அவன் காலடியில் விழுந்து கிடந்தது. அப்படியும் யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை; அடிக்கடி அவளைச் சந்தித்து அளவளாவ அவனுக்கு நேரமில்லை, இந்தப் பன்னிரண்டு வருடங்களில் ஏதோ சில தடவைகள் இருவரும் சந்தித்து ஆனந்தமாகக் காலம் கழித்திருக்கிறார்கள். எல்லாம் கனவுபோல கணநேரமும் பிரியாது அவனருகில் இருந்து அவனுக்கு வேண்டுவன செய்து அவனைக் களிப்பூட்ட ஆவல்கொண்டாள். அது வரை பூர்த்தியாகவில்லை.

இனிமேல் தாமதிக்கப்படாது. இந்தச்சமயத்தில்தான் அவனுக்கு என்னுடைய உதவி அதிகமாகத் தேவைப்படும். சத்துருக்கள் நாலுபக்கமும் சூழ்ந்துவிட்டனராம்' நிலைமை மிகவும் ஆபத்தானதென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். வாழ்நாள் முழுவதும் அவனுடைய ஆசைநாயகியாகவே காலம்கழித்தாள் என்ற வசை தன்மீது சுமத்தப்படப்படாது. இந்தக் கடைசித் தருணத்திலாவது தன்னுடைய கனவுத் தொடர்பை சட்டபூர்வமான திருமணமாக்கிக்கொள்ள வேண்டும், உடனே புறப்பட்டுச்செல்வது தான் உத்தமம்.

பேர்லின் நகரத்திலுள்ள அரசாங்க மாளிகையில் ஹிட்லர் ஒளித்திருந்த அறைக்குள் வந்துசேர்ந்தாள் ஈவாபுரோ— அவனுடைய ஆசைநாயகி. ஹிட்லர் அவளைக் கண்டவுடன் முதலில் எரிந்துவிழுந்தான். அந்த நாட்களில் அவன் எவரோடும் முகம்கொடுத்துக் கதைப்பதில்லை, வந்துகொண்டிருப்பதெல்லாம் துர்ச்செய்திகள், செய்தி கொண்டுவருபவன் மீது சீறிப்பாய்வான். எல்லோரும் தன்னை ஏமாற்றிவிட்டதாக அரற்றுவான். பைத்தியம் பிடித்தவன்போல் அங்குமிங்கும் அலைவான். ஈவாவுக்கும் இந்தவரவேற்புத்தான் கிடைத்தது. முதலில் எரிந்து சீறியவன் பழைய நினைவுகள் வந்ததும் சற்றே ஒடுங்கினான். ஒரு விநாடி அன்பு சுரந்தது.

சுற்றுமுற்றும் ரஷ்ய பீரங்கி குண்டுகள் வெடித்து சிதறின. போன டிசம்பர் மாதம் மொஸ்கோ நகரத்தின் கோபுரங்களை ஜேர்மன் சிப்பாய்கள் பார்க்கமுடிந்தது. அடுத்த ஏப்ரல் மாதம் ரஷ்ய வீரர் பேர்லின் வீதிகளில் உலாவினர், ரஷ்யாவின் கடுமையான மாரிகாலக் குளிர் 130 வருடங்களுக்கு முன்பு நெப்போலியனை துரத்தியடித்ததுபோல 1945-ம் வருடம் எதுக்கும் அசையாத ஜேர்மன் போர்

(5-ம் பக்கம் பார்க்க)


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) தீவொலி (நுவரேலியா) ஜூப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

REGAL – JAFFNA
NOW SHOWING
Richard Burton
Ava Gardner
Deborah Kerr
in
NIGHT of the IGUANA





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசித்திர ஒற்றுமை

மாஸ்கோ, ஏப். 29

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும், சோவியத் ஜனாதிபதி மிக்கோயனுக்குமிடையே உள்ள புதிய ஒற்றுமை பற்றி மிக்கோயன் குறிப்பிட்டார். தங்கள் இருவருக்கும் 12 பேரப்பிள்ளைகள் இருப்பதுதான் இந்த ஒற்றுமை என மிக்கோயன் கூறினர்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் லண்டனிலிருந்து மாஸ்கோ வழியாக இந்தியா திரும்பியபோது இச்சம்பவம் நடந்தது.

இருதலைவர்களும் பேசிக்கொண்டிருந்தபோது, தனது அருகிலிருந்த இந்தியத் தூதரக அதிகாரியின் மனைவி ஸ்ரீமதி ஜெயபாலைப் பார்த்து "உங்களுக்கு எத்தனை குழந்தைகள்" என மிக்கோயன் கேட்டார். தமக்கு 2 குழந்தைகள் இருப்பதாக அவர் கூறியது மிக்கோயனுக்கு வியப்பை அளித்ததாம்.

உடனே "ஏன் 2 குழந்தைகள் மட்டும் உள்ளன" என்று மிக்கோயன் கேட்டார்.

திருமதி ஜெயபால் வெட்கம் மேலிட்டவராக தமது கணவரைச் சுட்டிக் காட்டி "அவரைக் கேட்டால் தெரியும்" என்ருர்.

இறுதியில் அவர்களை விட்டுப் பிரியும்போது மிக்கோயன் அவர்களுக்கு நிறையக் குழந்தைகள் பிறக்கட்டும் என வாழ்த்திவிட்டுச் சென்ருர்.

## தமிழ் ஆசிரியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

'விரைவில் தமிழ்ப்பாடசாலையிலுள்ள காலியான இடங்களுக்கு தமிழ்த்தராதரம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஏற்கனவே தொடர்புகொண்டதற்கிணங்க உடன் நியமனம் வழங்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்ருேம்," என்னும் தீர்மானம் அகில இலங்கை தோட்டப்பாடசாலை ஆசிரியர் சங்கத்தினர் நடத்திய தமிழ்த் தராதரப்பத்திர ஆசிரியர்கள் கொண்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வண்ணை நாவலர் பாடசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு ஆசிரியர் இ. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

## கிரிக்கெட் போட்டி

சுழிபுரம், வியா.

சுழிபுரம் ஜூட்டிங் ஸ்ரார் கோஷ்டிக்கும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே சிநேகித பூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் ஜூட்டிங் ஸ்ரார் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர். போட்டி சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## வானொலி நிகழ்ச்சிகள் 30-4-65 கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை: 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 துதிப்பாடல் —எஸ. முத்துலிங்கம், 8-00 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு: 6-15 கிராமசஞ்சிகை, 7-15 கதாப்பிரசங்கம் —வி. கே. ஆறுமுகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர் விருப்பம், 10-00 கிளாரினெட், 10-15 தேர்ந்த இசை.

பருத்தித்துறையில்

## மூன்ருவது சிரமதான முகாம்

பருத்தித்துறை, வியாழன்

வடமராட்சி ... பிரிவில் இவ்வாண்டின் மூன்ருவது சிரமதானப் பணி மே மாதம் 26ந் தேதி பொலிகண்டியில் ஆரம்பமாகவிருக்கின்றது.

இக்கிராமத்தில் மீனவர்களுக்கென அரசாங்கத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்குச் செல்லும் இடங்களைத் துப்புரவுபடுத்தி பற்றைக் காடாக இருக்கும் அக்குடியேற்றப் பிரதேசத்துக்குப் பாதை வசதியையும் அமைக்கவிருக்கும் இப்பணிக்குத் தொண்டர்களை பதியும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாயும் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, கொண்டமாருறு, வல்வெட்டி, அல்வாய் கிராமசேவகர்கள் பிரிவிலிருந்து சேர்க்கப்படும் தொண்டர்களுடன் அகில இலங்கைவேலைவேண்டுவோர்கழக உறுப்பினரானபடித்தவாலிபர்களுமாக சுமார் 200 தொண்டர்கள் இச்சிரமதானத்தில் கலந்துகொள்வார்களென நம்பப்படுகிறது.

## மாநகரசபைகளுக்கு 1,600 விதிகள்

பம்பலப்பிட்டி, வியா

மாநகரசபைகளுக்கென தயாரிக்கப்பட்ட விதிகளடங்கிய அறிக்கையொன்றை அதற்கென நியமிக்கப்பட்ட சபை ஸ்தலஸ்தாபன மந்திரியிடம் சமர்ப்பித்துள்ளது. 1,600 சட்டவிதிகள் அடங்கிய இவ்வறிக்கையை சபையின் தலைவர் திரு. டி. விஜயரத்ன நேற்றைய தினம் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்திடம் ஒப்படைத்தார்.

திரு. திருச்செல்வம் தம்மிடம் தரப்பட்ட விதிகளையும் ஆலோசனைகளையும் செனட் சபையில் சமர்ப்பிக்கவிருக்கிருர்.

## ஆசிரியன் கடமை மந்திரி விளக்கம்

பிங்கிரியா, வியாழன்

"90,000 ஆசிரியர்களில் சுமார் 40,000 ஆசிரியர்கள் கூட்டரசாங்க அபேட்சகர்களுக்கு ஆதரவுதேடியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது." இவ்வாறு கல்வி மந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொலை பிங்கிரியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மந்திரி மேலும் பேசுகையில் ஆசிரியர்கள் மட்டுமின்றி அரசாங்க சேவையில் கடமையாற்றிவரும் ஊழியர்களும் தமது கடமை பொதுமக்களுக்கு சேவைசெய்வதுதான் என்பதை நன்கு உணரவேண்டும்எனத் தெரிவித்தார்.

நாட்டின் நலனுக்காகமக்கள் இனவகுப்பு பேதங்களை மறந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்றும் திரு. இரியகொலை கேட்டுக்கொண்டார்.

## ராஜீய தொடர்பு

பம்பலப்பிட்டி, வியா.

மாலசியா, பிலிப்பைன்ஸ் தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகளுடனும் ராஜீய தொடர்பு கொள்ள அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. மலேஷியாவில் ஸ்தானிகர் தலைமையிலுள்ள தூதராலயமும் மற்றும் இரு நாடுகளிலும் பொறுப்பதிகாரி தலைமையில் உள்ள தூதரகங்களும் நிறுவப்படும். கடந்த சிலகாலமாக மலேசியாவின் இலங்கை சார்பில் ராஜீயதொடர்பு எதுவும் ஏற்படடிருக்கவில்லை.

புதுடில்லி, ஏப்ரல் 29

சர்வதேச கூட்டுறவு சம்பந்தமான ஐ. நா. பொதுச்சபை கூட்டம் செப்டம்பர் 25ந் தேதி ஆரம்பமாகும்போது ஸ்ரீமதி எம். எஸ. சுப்புலட்சுமி ஐ. நா வில் இசைக்கச்சேரி நடத்துவார்.

## அன்பழகன்வருவார்

சாவகச்சேரி, வியா.

ஜூன் மாதம் நடுப்பகுதியில் கிளிநொச்சியில் நடைபெற இருக்கும் திருக்குறள் மகாநாட்டில் தமிழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர்களான பேராசிரியர் க. அன்பழகன், திரு என். வி. நடராசன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். இவர்கள் தவிர ஈழத்தின் பல தமிழறிஞர்களும் கலந்துகொள்வர்.

## பொதுக் கிணறில் சமரசம் நிலவுகிறது

பருத்தித்துறை, வியாழன

பருத்தித்துறை மார்க்கெட்டின் அண்மையிலுள்ள பொது கிணற்றில் சகலரும் பாவனைக்கு தண்ணீர் அள்ளுகின்றனர்.

சிறுபான்மைத் தமிழருக்கு மறுக்கப்பட்டிருந்த இக்கிணற்றில் அவர்கள் தாமாகவே தண்ணீர் அள்ளத்தொடங்கியதற்கு எதுவிதமான எதிர்ப்புமின்றியே மற்றவர்களும் அக்கிணற்றில் அள்ளுமளவுக்கு மாற்றமேற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திருமணத்தின் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யந்திரத்தை விரட்டிவிட்டது. ஜெனரல் ஐஸன்ஹோவரின் சேனைகளும் பேர்லினிக்குள் பிரவேசித்துவிட்டன. ஜேர்மன் நகரங்கள் ஒன்றன்பின் ஒன்ருக தவிடுபொடியாய்விட்டன. இராப்பகலாக நேசதேச விமானங்கள் பேர்லின் மீதும் குண்டுமாரி பொழிய ஆரம்பித்துவிட்டன. இனி விட்சியில்லை என்ருகிவிட்டது. பன்னிரண்டு வருடங்களாய் கட்டி எழுப்பிய ஜேர்மன் மகாசாம்ராஜ்யம் ஹிட்லரின் கண்முன் பொலுபொலு வென்று இடிந்துவிழுந்தது.

ஏப்ரல் மாதம் 29ம் திகதி இரவு மேயணி ஹிட்லர் ஈவாவை அழைத்தான், பாதிரி ஒருவர் தயாராக நின்ருர். ஒருநிமிடத்தில் திருமணம் முடிந்துவிட்டது' ஹிட்லர் தன் வாக்குறுதியை காப்பாற்றிவிட்டான். அரசியல் பெறுப்பு, ஆட்சிப் பெறுப்பு' யுத்தப்பொறுப்பு-எல்லாம் கை கடந்து போய்விட்ட படியால் இனிமேல் திருமணஞ்செய்து கொள்ள அவகாசம் கிடைத்து விட்டது. திருமணத்தின் பின் ஒருசிறிய விருந்து நடைபெற்றது. ஹிட்லர் கொஞ்ச நேரம் தன்னையும் சூழ்நிலைகளையும்மறந்து பழையகால நினைவுகளுக்கு இடம் கொடுத்தான், கட்சிப் போராட்டங்கள், சதிகள், சூழ்ச்சிகள், சிறைவாசம்: ஈற்றில் வெற்றி மகுடம்- இவைகளுக்கிடையே ஈவாவுடன் இன்பமாக கழித்த நாட்கள் ஹிட்லருக்கு கண்கலங்கியது' டுமீல் என்ற ஒரு வேட்டு. அடுத்த தெருவில் வெடித்த ரஷ்ய பீரங்கி ஹிட்லரின் சித்தசுவாதீனத்தை மீட்டது.

1945ம் ஆண்டு ஏப்ரல் 30ம் திகதி- இன்ருேடு இருபது ஆண்டுகள் கழிந்து விட்டன ஹிட்லரும் ஈவாவும் சுற்றினவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தத்தம் அறைக்குள் பிரவேசித்தனர். சற்று நேரம் பொறுத்து ஒரு வெடிச்சத்தம் கேட்டது: 12வருடங்களாய் ஜெர்மனியையும் நான்குவருடங்களாய் கிட்டத்தட்ட ஐரோப்பா கண்டம் முழுவதையும் சட்டியாண்டு உலகத்தில்முன்பின் கண்டிராத அடூழியங்களுக்கு ஆதிகர்த்தாவாகி ஆக்கவெறியும் சாதிவெறியும் கிளியாட்டம் ஆட,அகோர தாண்டவமாடிய வல்லரக்கன் ஹிட்லர் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு விட்டான். ஈவா அவனுக்கருகில் நஞ்சு குடித்து செத்துப்போயிருந்தாள்'

அடுத்த மேமாதம் 7ம் திகதி ஜேர்மனி பூரண சரணுகதி அடைந்தது. ஐரோப்பாவிலும்- யுத்தம் முடிந்தது.

—வி. எண். பி.

## பொது அறிவித்தல்

1946-ம் வருட இலங்கைச் சட்ட ஆக்கங்களில் 158-ம் அதிகாரத்தின் பிரகாரம் திருத்தப்பட்ட 1946-ம் ஆண்டில் நிறுவை அளவைக் கட்டளைச் சட்டம் இல. 37, பிரிவு 33 (3) இன் கீழ், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல வியாபாரிகளுக்கும் கீழ்வரும் அறிவித்தல் இத்தால் கொடுக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் சகல வியாபாரிகளும் 12 மாத கால எல்லைக்குள் அல்லது இதற்கு முன்பு தங்கள் நிறுவை அளவைக் கருவிகளை, நிறுவை அளவைப் பரிசோதகரிடம் காட்டி அங்கீகார அடையாள மாக, 1965-ம் ஆண்டு மே 31-ம் திகதி அல்லது அதற்கு முன்னர் முத்திரையிட்டுக் கொள்ளாது வைத்திருந்தால் 1946-ம் ஆண்டின் நிறுவை அளவைக் கட்டளைச் சட்டம் இல. 37, பிரிவு 41 இன் பிரகாரம் சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப் படுவதுமல்லாமல் ரூ 100 க்கு மேற்படாத அபராதமும, மூன்று மாத காலத்திற்கு மேலாகாத சிறைத்தண்டனை இரண்டில் ஒன்றும் அல்லது அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப்படுவதற்கு ஏதுவாயிருக்கும்.

அலுவலக நேரத்தில் தினமும் பிற்பகல் 2-00 மணியிலிருந்து 4-00 மணிவரை வியாபாரிகளின் நிறுவை அளவைக் கருவிகள் முத்திரையிடப்பட்டுக் கொடுக்கப்படும்.

(ஏ. எச். ஏ. சமி)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-4-65 158

கச்சாய் கிராமசபை

## கேள்வி விளம்பரம்

விடத்தல்பளை அரசினர் கள் கொடை ரோட்டு வேலைக்கான கேள்விப் பத்திரம் 15-5-65 சனிக்கிழமை காலை 10-00 மணிவரை கச்சாய் கிராமச் சபைக் கந்தோரில் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

14-5-65 முற்பகல் 12-00 மணிக்கிடையில் ரூபா 75-00 கட்டி கேள்விப்பத்திரம் பெற வேண்டும். இக்கட்டுப்பணத்தில் கேள்விப்பத்திரப் பணமாகிய ரூபா 25-00 திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. முழு விபரங்களையும் கச்சாய்க் கிராமச்சபைக் கந்தோரில்கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
அ. த. சிதம்பரப்பிள்ளை,
கச்சாய் கிராமச்சபைத் தலைவர்

கிராமசபை அலுவலகம்,
கச்சாய், கொடிகாமம்.
28-4-65 152

## காரைநகர் மக்களின் தண்ணீர்க் கஷ்டம்

சுழிபுரம்; வியாழன்

காரைநகர் மக்கள் தமது தண்ணீர்க் கஷ்டத்தை உடனடியாக தீர்க்க ஆகவேண்டிய நடவடிக்கைகள் எடுத்து உதவுமாறு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கோரியுள்ளனர். மக்களின் கஷ்டத்தை நன்கு ஆராய்ந்து அவர்களின் குடிதண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு மிக விரைவில் லொறி மூலம் தண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். இதுவிஷயமாக தான் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வரி விளம்பரம்

### தேவை

1-ம் திகதி தொடங்கி 15-ம் திகதி வரைக்கும் சென். ஜோன்ஸ் கலாசாலையில் நடைபெறவிருக்கும் பொருட்காட்சி விளம்பரகூடத்தில் வேலைசெய்வதற்கு திறமையான பெண்கள் தேவை. நேரில் வரவும். நவரத்னம் அன் கோ, 8, யும்மா மொஸ்க லேன், யாழ்ப்பாணம். 98

### வகுப்புகள்

மத்திய எழுது வினைஞர்/ அப்போதிக்கரிபுகுமுகபரீட்சைகளுக்கு ஆரம்பமாகும் மீட்டல் வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனிட்டெட் இன்ஸிரிரியூற், நெல்லியடி, கரவெட்டி/107 பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 208

### ஜீவ யாத்திரை?

எமது கவிதைக் கற்றீர். கவிதையும் கேட்டீர். ஏன் கதைகள் எழுதவில்லை என்றும் கேட்டு வந்தீர். இதோ எமது முதற் சிருஷ்டி- புதுமை கவினம். திடுக்கிடும் உண்மைச் சம்பவங்கள் பொதிந்துள்ளது. வயதுவந்தோர் மாத்திரம் வாசிக்கவேண்டியது. விரைவில் வெளிவரும். தமது ஊரில் தமது சங்கங்களில் அறிமுகம் விரும்பும் அன்பர்கள்தொடர்பு கொள்க: யாழ்ப்பாணன், கலாபவனம், பருத்தித்துறை. 88

### விற்பனைக்கு

மானிப்பாயில் வீடு வளவு 8 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 214, "ஈழநாடு" யாழ்ப்பாணம். 214

2 பரப்பு காணி ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு 476 ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 215

### வாடகைக்கு

கச்சேரிக்கு சமீபமாக சகல வசதிகளுடன் கோவில் (Temple Road) 36-ம் இலக்க மாடி வீடு வாடகைக்கு விடப்படும். விபரங்கட்கு: S. சிற்றம்பலம், 28, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 216

## புலவர்களுடன் காமராஜ ஆலோசனை

சென்னை, ஏப். 29

ஆட்சி மொழிச் சிக்கலைப் பற்றி சுமார் 100 தமிழ்ப் புலவர்களுடன் காமராஜ் ஆலோசனைநடத்தினர்.

ஆங்கிலமே இந்தியாவின் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என அவர்கள் காமராஜிடம் வலியுறுத்தியதாகத் தெரிகிறது.

ஆட்சி மொழிச் சிக்கல் தமிழர்களைப் பாதிக்காத முறையில் தீர்க்க தாம் எல்லா முயற்சிகளையும் செய்யப் போவதாக ஸ்ரீ காமராஜ் அவர்களிடம் உறுதியளித்தார்.

இக் கூட்டத்தில் புலவர்கள் மு. வரதராஜனர், கா. அப்பாத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## தீவுப்பகுதி எம்.பிக்கு வரவேற்பு

ஊர்காவற்துறை,வியாழன்

தீவுப்பகுதி எம். பி. திரு வி. நவரத்தினத்திற்கு வேலணைப்பகுதி மக்களால்வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில வரவேற்களிக்கப் பட்டது.

வேலணை கிராமசபை முன்னுள் தலைவர் திரு கே. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் அ பொன்னுத்துரை, திரு ஆலாலசுந்தரம்; திரு தில்லைச்சிவன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

# அளவெட்டி கொலை வழக்கில் எதிரிக்கு 4 வருடச்சிறை

யாழ்ப்பாணம், வெள்ளி

அளவெட்டி கொலைவழக்கில் எதிரி தனது முதல் கைமோசக் கொலைக்குற்றத்துக்கு குற்றவாளியென்றும், இரண்டாவது குற்றத்திற்கு குற்றவாளியென்றும் தெரிவித்ததால் நீதியரசர் எதிரிக்கு முதலாவது குற்றத்துக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனையும், இரண்டாவது குற்றத்துக்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார். இரு தண்டனைகளும் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டுமென நீதியரசர் தெரிவித்தார்.

அளவெட்டி கொலைவழக்கு வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் நேற்றுக்காலை நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் 1964ம் ஆண்டு ஏப்ரல் 13ந் தேதி அளவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுந்தரமூர்த்தி என்பவரைக் கொலைசெய்ததாகவும், வேலுப்பிள்ளை சின்னத்தம்பி என்பவரை மோசமான முறையில் தாக்கிப் படுகாயங்கள் விளைவித்ததாகவும் அவ்வூரைச் சேர்ந்த இளையதம்பி லிங்கம் என்பவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. மு. சிவசிதம்பரம், திரு. கண்ணுத்துரையின் அனுசரணையுடனும், திரு. எஸ். ஸ்ரீதரனின் உதவியுடனும் ஆஜரானார்.

எதிரி ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையென்றும், முன்னர் அவர் எவ்விதமான குற்றங்களுக்கும் ஆளாகவில்லையென்றும் இளம்வயதினர் என்றும் எதிரியின் சார்பில் எதிர் தரப்பு வழக்கறிஞர் திரு. சிவசிதம்பரம் வாதாடினார்.

"உமது வழக்கறிஞரின் வாதங்களை அவதானித்தேன். உம்முடைய நிலைமையை அவர் நல்லமுறையில் சொல்லியிருக்கிறார். ஆனாலும் நீர் இரண்டு குற்றங்களுக்கு ஆளாகியிருக்கிறீர்; ஒன்று கைமோசக் கொலை. மற்றது மோசமான முறையில் ஒருவருக்குக் காயம் விளைவித்திருப்பது. இவைகளைக்கவனித்தே இவ்விரண்டு குற்றங்களுக்குமாக உமக்கு இத்தண்டனையை வழங்குகிறேன்" என்று நீதியரசர் தீர்ப்பின்போது எதிரியைப் பார்த்துச் சொன்னார்.

# இரு இலங்கையர்களுக்கு ஐ. நா. உபகாரச் சம்பளம்

கொழும்பு, வியாழன்

திறைசேரி பொருளாதார பிரிவின் உதவி டைரக்டர் திரு. எல். எம். எல். மரைக்கார் வருகிற மே, ஜூன்மாதங்களில் நடைபெறவிருக்கும் ஐ. நா தொழில் நுட்ப பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் முகமாக இரண்டுமாத உபகாரச்சம்பளம் அளிக்கப்பட்டிருக்கிறார்.

நியுயோர்க்கிலுள்ள ஐ நா தலைமைக்காரியாலயத்தில் பயிற்சி பெறுவதும், உலக வங்கி, வாஷிங்டனிலுள்ள சர்வதேச உபகார நிதி ஸ்தாபனம், ஐ நா கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனம், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், உலக சுகாதார ஸ்தாபனம், உணவு விவசாய ஸ்தாபனம், ஆசிய தூரகிழக்கு பொருளாதார கூட்டுறவு ஸ்தாபனம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்வதும் இந்த உபகாரச் சம்பளத்தில் அடங்கும்.

திரு மரைக்கார் கடந்த 22-ம் திகதி இலங்கையை விட்டுப் பிரயாணமானார்.

பிரான்ஸில் மே 8-ம் திகதி முதல் 18ம் திகதிவரை நடைபெறவிருக்கும் மற்றோர் ஐ நா பிரதேச சபைக் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பொருட்டு அரசாங்க மின்சார இலாகாவைச் சேர்ந்த அபிவிருத்தித் திட்ட என்ஜினியர் திரு என் சண்முகராசா நாளை புறப்பட்டிருக்கிறார்.

—

## தொழிற்சங்கத்துக்கும் இடம்

பம்பலப்பிட்டி, வியா

அரசாங்கசேவை சேமலாபநிதிக் கட்டுப்பாட்டுச்சபையில் தொழிற்சங்கப்பிரதிநிதியொருவரையும் நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திறைசேரி அரசாங்க மத்திய கவுன்சிலுக்கும் இணைக்கப்பட்ட தொழிற்சங்க சம்மேளனத்துக்கும் அனுப்பியுள்ள நிருபத்தில் ஒரு பிரதிநிதியை இருவாரங்களுக்குள் நியமிக்குமாறு கோரியுள்ளது

## கைதடி கொலை வழக்கு

### தொகுப்புரை ஒத்திவைப்பு

சாவகச்சேரி, வியாழன்

கைதடி கொலைவழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கொட்டில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது பொலிசார் சாட்சியமளித்தனர், பின்னர் சாவகச்சேரி பொலிஸ் சப்- இன்ஸ்பெக்டர் தேவசகாயம் வழக்கை முடிப்பதாக அறிவித்தார். எதிரியின் வழக்கறிஞர் தான் தொகுப்புரை நிகழ்த்தப் போவதாக அறிவித்தார் நீதிபதி வழக்கை அடுத்தமாதம் பத்தாம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றைய தினம் எதிரி தரப்பு வழக்கறிஞர் தொகுப்புரை நிகழ்த்துவார்.

இவ்வழக்கில் கைதடியைச் சேர்ந்த சண்முகம் ஆறுமுகம் என்பவரைக் கொலை செய்ததாக அவரது மருமகன் எஸ். சின்னத்தம்பி மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

—

## நாவற்குழி கொலை வழக்கு

சாவகச்சேரி, வியாழன்

நாவற்குழி கொலை வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு ஜேபேட் சில்வா எதிரியை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டு வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தியுள்ளார்.

இவ்வழக்கில் நாவற்குழியை சேர்ந்த விளசி பொன்னையா என்பவனை அதே ஊரைச் சேர்ந்த பொன்னையா என்பவரைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது எதிரி சார்பில் வழக்கறிஞர் ரீ. கணேசலிங்கம் ஆஜரானார், வழக்காளி தரப்பில் சப்-இன்பெக்டர் தேவசகாயத்தின் உதவியுடன் வழக்கறிஞர் கே. எஸ் சண்முகநாதன் ஆஜரானார்.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

சங்கரத்தை, வியா.

கடந்ததிங்கட்கிழமை மாலை சங்கரத்தை குள மைதானத்தில் உள்ள மாதர்சங்கக் கட்டிடத்தில் திரு. அ பஞ்சலிங்கம் தலைமையில் திருநாவுக்கரசநாயனார் குருபூசை வெகு விமரிசையாக நடைபெற்றது. திரு. அ. தெட்சணாமூர்த்தி, திரு. க, மருதபிள்ளை (ஆசிரியர்), திரு. க. வைரவநாதர், நாவுக்கரசர்பற்றி சொற்பொழிவாற்றினர். இந்து வாலிப சங்கக்காரியதரிசி செல்வன் நா இரத்தினவேல் நன்றிகூறினர் முடிவில் பிரசாதம் வழங்கப்பட்டது

°°°

யாழ்ப்பாணம், வியாழன்

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் ஆதரவில் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை சென்ற திங்கட்கிழமை ஆலயத்தில் கொண்டாடப்பட்டது அன்றைய தினம் விசேஷ பூஜையும் கூட்டுப்பிரார்த்தனையும் விசேஷ சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

அன்று திருநாவுக்கரசநாயனாரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

—

## நாளை மேதினம்..:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருங்கிலும் டாக்டர் என் எம் பெரேராவும் டாக்டர் எஸ ஏ விக்கிரமசிங்காவும் செல்வர்.

## யாழ் நகரில்

யாழ்ப்பாணம், வெள்ளி

மொழி வழி தொழிற் சங்கங்களின் கூட்டு மேதினவிழா நாளை யாழ்ப்பாண முன்றலில் நடைபெறும், திரு ப, நித்தியானந்தசர்மா தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பல்தொழிற் சங்கபிரதிநிதிகள் சொற்பொழி வாற்றுவார்கள்.

கூட்டம் ஆரம்பமாகுமுன் சைக்கிள், வாடகைக்கார் மாட்டுவண்டி, உழவு இயந்திர ஊர்வலங்கள் கூட்டமைதானத்தில் நடைபெறும் என அறியப்படுகிறது. சமசமாஜ கம்யூனிஸ்கட்கு மேதினவிழா யாழ்ப்பாணம் பழைய பஸ் நிலையத்தில் மானகரசபை அங்கத்தவர் திரு எஸ. நாகராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது முக்கிய பேச்சாளர்களாக செனட்டர் டொறிக் டி சூசா, கொழும்பு மாநகரசபை அங்கத்தவர் திரு ஏச், ஜி, எஸ. ரத்தினவிரா ஆகியோர் கலந்து கொள்கிறார்கள், ஊர்வலம் மாலை மூன்று மணிக்கு நல்லூர் கந்தசாமிகோவில் வீதியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும் என அறியப்படுகிறது.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் மேதின விழா யாழ்ப்பாணம் முற்றவெளிமைதானத்தில் நடைபெற விருக்கிறது. விழா ஆரம்பத்தில் ஊர்வலமும் இடம்பெறும்.

இம் மேதின விழாவை, இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் ஆகியவை கூட்டாகச் சேர்ந்து நடத்துகின்றது ஊர்வலம் யாழ்ப்பாணம் முட்டாளை கடைச் சந்தியிலிருந்து மாலை மூன்று மணிக்கு ஆரம்பமாகும் பிரதம பேச்சாளர்களில் ஒருவராக இலங்கை தொழிற் சங்க சம்மேளன உபதலைவர் திரு ஏ ஆர் எட்மண்ட் கலந்துகொள்வார்

—

## நிறைவுவிழா

அளவெட்டி, வியா.

அளவெட்டி சனசமூகநிலையத்தின் 17-வது ஆண்டு நிறைவுவிழா திரு. வி. கே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. வலிவடக்கு காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை, மல்லாகம்கிராம சபைத்தலைவர் திரு கே ஞானசூரியன், திருவாளர்கள் எஸ் நடராசா வேல்மாறன் ஆகியோர் இவ்விழாவில் பேசினர். ... கதம்பநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெற்றன.

## காட்டுப்பகுதியில் வீடமைப்புத் திட்டம்

### நடுத்தர மக்களுக்கு புனர்வாழ்வு

வவனியா, வியாழன்

வவனியா நூற்றிப்பததாவது கட்டையில் அநுராதபுரம் வீதியில் சுமார் ஐம்பது ஏக்கர் காட்டு நிலத்தில் வீடமைப்புத் திட்டமொன்றை மேற்கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக வவனியா நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா தெரிவித்துள்ளார்.

"அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் இப்பகுதியிலுள்ள ஏராளமான மக்கள் தங்களது வீடுகளை இழந்துள்ளனர். வீடில்லாது இப்பொழுது பலர் கஷ்டப்படுகின்றனர். இவர்களின் குறைகளை நீக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றோம். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

"சூறாவளியினால் இப்பகுதி காடடிலுள்ள ஏராளமான தேக்குமரங்கள் முறிந்து விழுந்துவிட்டன, அதிகமான தேக்குமரங்கள் சேதமுற்றப் பகுதியில், நடுத்தர வகுப்பினருக்கென வீடமைப்புத் திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னோடியாக குறிப்பிட்ட பகுதிகளில் புதிதாக தேக்கங் கன்றுகளை நாட்டுவதற்கு அனுமதி வழங்குவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும். புயலினால் முறிந்து விழுந்த தேக்கு மரங்களை அகற்ற இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதுகுறித்து நகர பட அமைப்பாளரிடமிருந்து பதில் கிடைத்த பின்னர் மேற்படி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்" என்றும் திரு பொன்னையா குறிப்பிட்டார்

குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் மூன்று முறிப்பு சிங்களப் பாடசாலைக்கென மூன்று ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மாநகரசபை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும், பொதுப்பணம் வீணில் விரையமாக்கப்படுவதையும் இனியும் சகித்துக்கொண்டிருக்கமாட்டாது.

சபையிடம் ஊதியம்பெற்றுக்கொண்டு தனிப்பட்டமுறையில் சொந்தத்திலும் தொழில் புரிவதை சபை அனுமதிக்க மாட்டாதென்றும் அந்த கற்றறிக்கையில் மேயர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று மாநகர சபைக்குச்சொந்தமான கருவிகளையும், பொருள்களையும் திருடிச்சென்று அவற்றை தம் சொந்த முயற்சிகளுக்கு உபயோகிக்கும் ஊழியர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மேயர் எச்சரித்துள்ளார்.

—

## அடுத்த நடவடி:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படங்களை அமெரிக்க உயர் அதிகாரிகள் இப்பொழுது பரிசீலனை செய்து வருவதாக வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன

### இஸ்வெஸ்டியா எச்சரிக்கை

இந்திய-பாகிஸ்தான் எல்லைச்சண்டை தீவிரமடைவதால் வியட்னாமில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக ரஷ்யப் பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' தெரிவித்துள்ளது

### கடைசி செய்தி

எல்லைச்சண்டை குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய அடுத்த நடவடிக்கை குறித்து பாகிஸ்தானின் மந்திரிசபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் இக்கூட்டம் மூன்று மணி நேரம் வரை நடைபெற்றதாகவும் கடைசிச் செய்திகள் கூறுகின்றன

—

## "விளைவுகளை :..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது. விமானப் படையினரும் சேவைக்கு அழைக்கப் பட்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் லண்டனிலுள்ள இளம் சீக்கியர்கள், கட்ச் பகுதியில் தாங்கள் சண்டையிடும் பொருட்டு இந்தியா திரும்பத் தீர்மானித்திருக்கிறார்கள் என்றும் தங்கள் பெயரை அவர்கள் ஹைகமிஷனரிடம் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும் அறிவிக்கபபட்டது.

அமெரிக்க டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளை இந்தியத் துருப்புகளிடமிருந்து கைப்பற்றியிருப்பதாக பாகிஸ்தான் கூறிய குற்றச்சாட்டை இந்தியா, "அபாண்டமான பொய்" என மறுத்திருக்கிறது. இந்தப் பீரங்கிகள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுவதால் அமெரிக்க ஆயுதங்கள் தங்களுக்கு தேவையில்லை என அது அறிவித்திருக்கிறது.

## மந்திரியின் வவனியா விஜயம்

### பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிடுவார்

வவனியா, வியாழன்

ஸ்தல ஸ்தாபன மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் கியு. ஸி. அடுத்த மாத நடுப்பகுதியில் வவனியாவுக்கு விஜயம் செய்து, சூறாவளியினால பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிடவிருக்கிறார். மந்திரி திருச்செல்வத்துடன் நிரந்தரக்காரியதரிசியும் இங்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வவனியா நகரசபைத் தலைவர் திரு எம் பொன்னையா, அண்மையில் ஸ்தலஸ்தாபன மந்திரியைச் சந்தித்து சூறாவளியினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வவனியா, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து நிவாரண வேலைகளை ஆரம்பிக்கும்படி கேட்டிருந்தார்

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தாம் விஜயம் செய்வதாகவும், நிதி உதவியுடன் சகல நிவாரண உதவிகளைச் செய்ய தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் மந்திரி திருச்செல்வம் நகரசபைத் தலைவருக்கு உறுதியளித்துள்ளார்

## தசாக கிரியைகள்

### ஸ்ரீ சி: இரத்தினசாமிக் குருக்கள்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பூஜாதுரந்தரராக விருந்த ஸ்ரீ சீதாபதி ஐயர் இரத்தினசாமிக் குருக்கள் சித்திரை மீ 11-ந்திகதி வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார், அன்னாரின் தசாகக் கிரியைகள் சித்திரை மீ 20-ந் திகதி (2-5-65) ஞாயிற்றுக் கிழமை மு. ப. 10 மணியளவில் மானிப்பாயில் நடைபெறும். உறவினர்களையும் அன்பர்களையும் சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம். இ. சீதாபதி ஐயர் சகோதரர்கள். உடுவில் வீதி, மானிப்பாய். 218


## மேதின விழா

1-5-65

யாழ். நகர முன்றல்

ஊர்வலம்: கல்வியங்காடு சந்தையிலிருந்து 4-30க்குப் புறப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org